Crlmp No. 7530/2024 in CC.74/2019- PW-6-ராஜா
07.12.2024
Time 03.40 PM

எதிரி தரப்பில் அ.சா.6 யை திரும்ப அழைக்கக் கோரி மனு தாக்கல் செய்ததன் பேரில் திரும்பவும் இன்று அழைக்கப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-

1. எங்கள் ஊரில் கடந்த 2012ம் ஆண்டு செங்கல் சேம்பருக்கு வேலைக்கு வந்தோம். எங்கள் ஊரைச் சேர்ந்த 10 குடும்பங்கள் கணவன் மனைவி மற்றும் பிள்ளைகளுடன் வேலைக்கு வந்தோம். அச்சமயத்தில் ஊரில் மழை பெய்யாததால் விவசாயம் இல்லை. எங்களை கார்த்தி என்பவர் அழைத்து வந்தார் என்று முதல் விசாரணையில் கூறிய விபரங்களை போலீஸ் விசாரணையில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல.

2. சுமார் 6 மாதங்கள் வேலை பார்த்தோம். தங்குவதற்கு சேம்பரில் இடம் கொடுத்தார்கள். நாங்கள் சம்பளத்தில் காய்கறி வாங்கிச் சமைத்து சாப்பிட்டு வந்தோம். வாரம் ஒரு முறை சனிக்கிழமையன்று சம்பளம் தருவார்கள் என்று முதல் விசாரணையில் கூறிய விபரங்களை போலீஸ் விசாரணையில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல.

3. வாரத்திற்கு ரூ.2000/-முதல் ரூ.3000/-வரை சம்பளத்திற்கு வேலை செய்வோம். சம்பளத்தில் மூன்றில் 1 பங்கை எங்களுக்கு கொடுப்பார்கள். மீதி பணத்தை அட்வான்ஸ் தொகையில் கழித்துவிடுவார்கள் என்று முதல் விசாரணையில் கூறிய விபரங்களை போலீஸ் விசாரணையில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல.

4. எங்களுக்கு ரூ.40,000/- அட்வான்ஸ் தொகையாகக் கொடுத்தார்கள். நாங்கள் தினமும் நள்ளிரவு 01.00 மணியிலிருந்து மதியம் வரை வேலை செய்வோம். ஊரில் நல்லது கெட்டது எதுவும் நடந்தால் மனைவி மட்டுமே செல்லமுடியும். நாங்கள் செல்லமுடியாது என்று முதல் விசாரணையில் கூறிய விபரங்களை போலீஸ் விசாரணையில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல.

5. சேம்பர் உரிமையாளர் கம்பால் எங்களை ஏன் சரியாக வேலை செய்யவில்லை என்று மிரட்டுவார். அரசு அதிகாரிக்கு தெரிந்து எங்களை மீட்டுச் சென்றார்கள். போலீசார் எங்களை விசாரித்தார்கள் என்று முதல் விசாரணையில் கூறிய விபரங்களை போலீஸ் விசாரணையில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல.

6. போலீசார் என்னை விசாரிக்கும் போது 29.07.2012ம் தேதியன்று இரவு காரியாபட்டி தாசில்தார், வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர் சேம்பருக்கு வந்தார்கள் என்றும் அதன் பின்பு நாங்கள் விடுவிக்கப்பட்டு ஊருக்கு வந்தோம் என்று தெரிவித்தோம் என்றால் சரிதான்.

7. அங்கு தங்கி இருந்த 10 குடும்பங்களும் ஒன்றாக தான் வேலைக்கு சென்றுவிட்டு ஒன்றாகத்தான் திரும்பி வருவோம். காலை 4 மணிக்கு வேலைக்கு வருவோம். வேலை முடிக்க இரவு 6, 7 மணி ஆகும்.

8. எத்தனை மணியிலிருந்து எத்தனை மணி வரை வேலை பார்த்தோம். எத்தனை செங்கல் அறுத்தோம். எவ்வளவு வருமானம் கிடைத்தது. அதில் எவ்வளவு பிடித்துக் கொண்டார்கள். எவ்வளவு பணத்தை எங்களுக்கு கொடுத்தார்கள் என்ற விபரத்தை குறித்துக் கொள்வார்கள் என்றால் சரிதான். சின்ன நோட்டுப்புத்தகத்தில் அந்த விபரத்தை எழுதிக் கொடுத்தார்கள். அதை விசாரணையின் போது தாசில்தாரிடம் கொடுத்தேன்.

9. எங்கள் எல்லோருக்கும் தனித்தனியாக நோட்டுப்புத்தகத்தில் பதித்துக் கொடுப்பார்கள். அதை பார்த்தால் நாங்கள் அட்வான்ஸ் வாங்கிய விபரம், அதில் எவ்வளவு கழிந்தது என்ற விபரம், எவ்வளவு நாட்கள் வேலை பார்த்தோம் என்ற விபரம் எழுதப்பட்டிருக்கும் என்றால் சரிதான்.

10. அருப்புக்கோட்டை RDO அலுவலகத்திலிருந்தும், காரியாபட்டி வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்தும், அபிராமம் காவல் நிலையத்திலிருந்தும் சேம்பருக்கு வந்து எங்களை அபிராமம் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று அங்கிருந்து திருச்சுழிக்கு அழைத்துச் சென்றார்கள். மேலே சொன்ன வருவாய்த்துறை அதிகாரிகளைத் தவிர வேறு வருவாய்துறை அதிகாரிகள் வரவில்லை என்றால் சரிதான்.

11. எங்களை மீட்டுச் சென்றதற்கு தாசில்தார் மீட்புச் சான்றிதழ் வழங்கினார். அது என் வீட்டில் உள்ளது.

12. District bonded labour rehabilitation fund கணக்கிலிருந்து ரூபாய் 20,000/- எங்கள் ஒவ்வொருவருக்கும் கொடுத்தார்களா என்றால் ஒரு வாரம் கழித்து கொடுத்தார்கள். இந்த விபரங்களை போலீஸ் விசாரணையில் தெரிவிக்கவில்லை.

13. சேம்பரின் உரிமையாளர் யார் என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால்

தெரியும். ஆஜர் எதிரிதான் உரிமையாளர். அவர் உரிமையாளர் என்பதற்கு ஏதேனும் ஆவணங்களை பார்வையிட்டுள்ளீர்களா என்றால் ஆவணங்களை எதையும் பார்க்கவில்லை. உரிமையாளர் சேம்பருக்கு வருவதை வைத்து தெரிந்து கொண்டோம். அதோடு நாங்கள் மூர்த்தியிடமிருந்து தான் அட்வான்ஸ் பணம் பெற்றோம். வாரந்தோறும் அவர்தான் எங்களுக்கு சம்பளம் கொடுப்பார் என்பதால் அவர் தான் உரிமையாளர் என்று தெரிந்து கொண்டோம்.

14. நான் அபிராமத்தில் உள்ள எதிரியின் வீட்டிற்கு வந்து அவரிடம் பணம் பெற்றுக்கொண்டு பாண்ட் பத்திரத்தில் கையெழுத்து வாங்கினார். அதனை எதிரியே வைத்துக்கொண்டார். எங்களுக்கு அதன் நகலை கொடுக்கவில்லை. இந்த விபரங்களை நான் போலீசார் விசாரணையில் தெரிவிக்கவில்லை.

15. கல் அறுப்பதை கணக்குப் பிள்ளை எழுதிக் கொடுப்பார். மூர்த்தி அதில் கையெழுத்து எதுவும் போடமாட்டார். எங்களுக்கு பணம் கொடுப்பார். கணக்குப்பிள்ளை மூர்த்தியிடம் வேலை பார்த்தார் என்பதற்கு எந்த ஆவணங்களும் இல்லை.

16. சுகன்யா சேம்பர் என்ற பெயரில் அபிராமத்தில் எந்த சேம்பரும் இல்லை என்றால் சரியல்ல. அதற்கு மூர்த்தி உரிமையாளர் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் சுகன்யா சேம்பரில் வேலை செய்யவில்லை என்றால் சரியல்ல.

17. புள்ளி விபரத்திற்காக போடப்பட்ட பொய்யான வழக்கு என்றால் சரியல்ல.

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.